RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22353

OPEN ACCESS

# அதிரை முஹம்மது தாஹாவின் சிற்றிலக்கியங்களில் இயற்கை வருணனைகள்

கா. ரசூல்பீ [அ, *], ப. பூஞ்சோலை [அ]

[அ] தமிழ்த்துறை, கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி, உமையாள்புரம், செவந்திலிங்கபுரம், முசிறி, திருச்சிராப்பள்ளி-621202, தமிழ்நாடு, இந்தியா

# Descriptions of nature in the minor literature of Muhammad Taha

K. Rasulbee [a, *], P. Poondcholai [a]

[a] Department of Tamil, Kachiyaapa Munivar Tamiyazhal Kalluri, Musiri-621202 ,Tiruchirappalli, Tamil Nadu, India

* Corresponding Author: rasulbee@gmail.com

Received: 26-04-2022
Revised: 08-07-2022
Accepted: 15-07-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Literature is about taking us to the path of ideals. Instilling knowledge. To show the world the goal of the creators. Wealth is perishable one day. But literature is not destroyed. Though hidden in the book, it lives on in the minds and minds of the learned. Even if literature does not reach the hands of everyone in the world, it will always be in the minds of a few people in one corner or the other. They cannot be translated into works and literature that everyone can like. It is created only with the variety of thoughts that arise in the mind. Though many literary forms have changed from the Sangam age to the present day, the purpose of the creation of literature has not changed. The main purpose of the creation of literature is to bring out the joys and sorrows of the world. All of us have been living in harmony with nature till date. When the joys and sorrows of human life are created in the form of literature, it is like saying something imaginary to leave only life as love, heroism and charity. Explaining nature and the context in which the event takes place takes the reader back to the place where the environment took place. That is why nature occupies such an important place in literature. In literature, as much as there is a parable, there are as many descriptions of nature as there are descriptions of nature. This method has been practiced till date. Religions and religious literature are no exception. Descriptions are particularly widely used in modern literature. The purpose of this article is to bring out how the descriptions of nature have been included in the literature of the author of Islamic literature, Muhammad Taha.

**Keywords:** Muhammad Taha, Islamic literature, Minor Literature, Nature

## முன்னுரை

இலக்கியம் என்பது நம்மை இலட்சியப்பாதைக்கு அழைத்துச் செல்வது. அறிவை ஊட்டுவது. படைப்பாளர்களின் குறிக்கோளை உலகிற்குக் காட்டுவது. செல்வமானது என்றாவது ஒருநாள் அழிந்துவிடக் கூடியது. ஆனால் இலக்கியங்களுக்கு அழிவு கிடையாது. ஏட்டில் மறைந்தாலும் கற்றவர்களின் அறிவிலும், மனதிலும் வாழக்கூடியது. இலக்கியங்கள் உலகில் உள்ள அனைவரது கைகளுக்கும் சென்று சேராவிட்டாலும்கூட ஏதாவது ஒரு மூலையில் ஒருசில மனிதரின் மனங்களில் பல்வேறு எண்ண ஓட்டங்களில் எப்போதும் அசைபோடும். அவற்றை அனைவரும் விரும்பக்கூடியவகையில் அனைவராலும் படைப்புகளாக, இலக்கியங்களாக மாற்ற இயலாது.

மனதில் தோன்றும் பல்வேறுவகை எண்ணங்களைக் கொண்டு மட்டுமே படைக்கப்படும். சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் பல்வேறு இலக்கிய வடிவங்கள் மாறியிருப்பினும், இலக்கியங்கள் படைக்கப்படுவதன் நோக்கம் மாற்றம்பெறவில்லை. உலகின் இன்பதுன்பங்களை வெளிக்கொணர்வதே இலக்கியங்கள் படைக்கப்படுவதன் தலையாய நோக்கமாகும். நாம் அனைவரும் இயற்கையோடு இணைந்த வாழ்வையே இன்று வரை வாழ்ந்து வருகின்றோம். படைப்புகளில் மனித வாழ்வின் இன்ப துன்பங்களை இலக்கியமாகப் படைக்கின்ற போது காதல், வீரம், கொடை என வாழ்க்கையை மட்டும் கூறிவிட்டுச் செல்வது கற்பனையாக ஒன்றைக் கூறுவது போல் அமையும். இயற்கையையும் நிகழ்வு நடைபெறும் சூழலையும் விளக்கும் போது, படிப்பவர்களைச் சூழல் நடந்த இடத்திற்கே கூட்டிச் செல்லும். அதனாலேயே இலக்கியங்களில் இயற்கை மிக முக்கிய இடம் வகிக்கிறது. இலக்கியங்களில் உவமை எந்த அளவு இடம்பெறுகிறதோ அதே அளவு இயற்கை வருணனைகளும் இடம்பெறுகின்றன. இந்த முறையானது இன்று வரை கையாளப்பட்டு வருகிறது. இதற்குச் சமயங்களும் சமய இலக்கியங்களும் கூட விதிவிலக்கல்ல. குறிப்பாக இக்கால இலக்கியங்களில் வருணனைகள் அதிகமாகவே பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் இசுலாமிய இலக்கியங்களைப் படைத்த அதிரை முஹம்மது தாஹாவின் இலக்கியங்களில் இயற்கை பற்றிய வருணனைகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கையோடு இயைந்த வாழ்வு

நாகரீக வளர்ச்சியால் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டாலும் நாம் அன்று முதல் இன்று வரை இயற்கையோடு இணைந்த வாழ்வையே வாழ்ந்து வருகிறோம். பொதுவாக இலக்கியங்கள் அந்தந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வு, இயற்கை அதனைச் சுற்றிலும் உள்ள நிகழ்வுகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒரு நாடகமானது அரங்கேற்றுவதற்குப் பின்புலமாக திரைச்சீலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

‘ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்

கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு”

என்பதை இலக்கியங்கள் விளக்குகின்றன (Arunachalam, 2018). அதன் காரணம் காட்சி நடைபெறும் சூழலை உள்ளவாறே காட்டும் ஒரு முயற்சியேயாகும். அதே கலையுணர்வே இலக்கியங்களின் வாயிலாகவும் சுட்டப்படுகின்றன. தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் நிலங்களை வகைப்படுத்துவதன் மூலம் வாழும் மக்களின் ஒழுக்கங்களையும் வகைப்படுத்துகின்றன. 2500 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த தொல்காப்பியர் வாழ்வியல் நிலைகளை வகைப்படுத்துகிறார். களவு, கற்பு என அகத்திணையைப் பற்றி குறிப்பிடும்போது திணைகளை அகம், புறம் என பாகுபடுத்தியுள்ளார்.

## சுற்றுச்சூழல்

கடவுளோடும், வழிபாடுகளோடும் இயற்கையை ஏதோவொரு வகையில் இணைத்தவர்கள் நம் முன்னோர்கள். நாம் அனைவரும் சுற்றுச்சூழல் அமைப்பில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ‘சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று, வான்வெளி, சூரியன், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும், மனிதன் உருவாக்கம் ஒழுங்கமைப்புகளையும், அவனது வாழ்க்கை நிலை, கலாச்சாரம், தொழில்நுட்பச் சமூக பொருளாதார சட்ட அமைப்பு, அரசியல், சுகாதாரம் அமைப்பு போன்றவற்றையும் உள்ளடக்கியது” என்பர்.

“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்

காடும் உடையது அரண்”

என்று நமது நாட்டின் சுற்றுச்சூழலே அதற்கு அரணாக விளக்கும் சிறப்புகொண்ட நாடு நம் பாரதநாடு. இதனை தமிழ் இலக்கியங்களே நமக்குப் பறைசாற்றுகின்றன. மேலும் நிலங்களின் அமைப்புகளையும்,

“மண் திணிந்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்

விசும்பு தைவரு வளியும்

வளி தலையிய தீயும்

தீ முரணிய நீரும் என்றாங்கு”

என இயற்கையையும், பஞ்சபூதங்களையும் அதன் அமைப்புகளையும் வரிசைப் படுத்தியுள்ளனர் (Ramaiya, 2006).

## இஸ்லாமிய சமயம்

சங்க காலம் முதலே அரபு நாட்டுடன் தமிழகம் வாணிகத் தொடர்பு கொண்டுள்ளது. அரபு நாட்டில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் நபிகள் நாயகம் அவர்களால் இசுலாம் மதம் தோன்றியது. வணிகத் தொடர்பு மூலம் தமிழகத்தினுள்ளும் இசுலாம் சமயம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அரபு உருதுச் சொற்கள் தமிழ் மொழியுடன் கலப்பை உருவாக்கியது.

“கி.பி.12 ஆம் நூற்றாண்டு முதலே முகமதியர் தமிழ்நாட்டு அரசியலிலும் புகழ்பெற்றுத் திகழ்ந்துள்ளனர். கி.பி.13ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் வலிமை இழந்த போது முகமதியர் தமிழகத்தில் புகுந்து பாண்டியரின் தலைநகரான மதுரையைக் கைப்பற்றினர். இவ்வரசியல் மாற்றம் முகமதியப் புலவர்களுக்குச் சாதகமாக இருந்ததால் இசுலாமியப் புலவர்கள் பலர் தோன்றினர். இசுலாமிய நூல்களை தமிழ் நூல்களாக மாற்றினர். 17ஆம் நூற்றாண்டு முதல் இசுலாமிய இலக்கியம் தழைத்து ஓங்கி வளர்ந்துள்ளது. முகமதியர்களும் பிற சமயத்தவரைப் போலவே புராணங்களும், சிற்றிலக்கியங்களும் படைத்துள்ளதோடு தாயுமானவர் போன்று தத்துவ நூல்களும் படைத்துள்ளனர்.” என்று திருமதி ஜெயம் தனது நூலில் குறிப்பிடுகிறார் (Kamal Batcha, 2006). இதன் மூதன் இசுலாமிய மன்னர்களின் ஆட்சி செய்த காரணத்தினால் இசுலாமிய புலவர்களின் இலக்கிய ஆளுமைகளும் தழைத்தன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## இஸ்லாமிய புலவர்கள்

உமறுப்புலவர், வண்ணக்களஞ்சியப் புலவர், சேகனாப்புலவர், காசிம் புலவர், சவ்வாதுப் புலவர், சையது முகைதீன் கவிராசர், குணங்குடி மஸ்தான் சாகிபு, செய்குத்தம்பி பாவலர், சர்க்கரைப் புலவர், குலாம் காதிறு நாவலர் என இசுலாம் சமயத்தில் இலக்கியங்களில் பல்வேறு படைப்புகளைத் தோற்றுவித்தனர். சமயத்தை வளர்க்கவும், சமயக் கருத்துக்களைப் பரப்பவும் தற்போது வரையிலும் இசுலாமிய இலக்கியங்கள் இன்று வரை படைக்கப்பட்டு வருகின்றன. மேலும், “இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் சிற்றின்ப பொருளைப் பாடுவதாக ஒரு நூலைக் கூட இயற்றவில்லை. இது இசுலாமியச் சிற்றிலக்கியங்களின் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பாகும். இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் யாவுமே பேரின்பப் பொருளையே பெரிதும் பாடுகின்றன” என்று சாயுபு மறைகாயர் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

“நல்ல குணம்

அற வழியில் பொருள் தேடுதல்

உண்மை பேசுதல்

இறைவனிடம் நம்பிக்கை

ஆகிய நான்கும் உடையவன் எந்த நாளிலும்

துன்பம் அடையான்”

என்கிறார் நபிகள் பெருமானார் (Mohammed Taha, 2000). இசுலாமிய இலக்கியங்கள் குர்ஆனின் அரிய கருத்துக்களைப் பறைசாற்றும் முரசங்களாகவே திகழ்ந்தன. அதன் வழி வந்த புலவரே அதிராம்பட்டினத்தைச் சார்ந்த முஹம்மது தாஹா ஆவார். நபிகள் நாயகத்தைப் பின்பற்றி இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டு, ‘சித்திரக் கூடங்களும், மணிமண்டபங்களும் ஒரு நாட்டின் மேம்பாட்டை வெளிச்சமிடும். ஆனால் காலக்கரையான் அழித்திவிடும். கவிஞன் படைத்தளித்த பண்பாடு மிக்க இலக்கியங்கள் அழியாத அமரநிலை பெற்றுவிடும்” என்று காமல் பாட்சா கூறுகிறார் (Kamal Batcha, 2006). இவ்வாறு இசுலாமிய புலவர்கள் நம்பிக்கையுடன் பேனாக்களை ஆயுதமாகக் கொண்டு பல்வேறு சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார்.

“அருட்கவி’ தாஹா என்றாலே உயிர்கவி

ஆஹா!! ஞானக்கவிகள் பாடித்திரியும் (அவர் ஒரு)

வானம்பாடி!!! புல்புல் பறவை!!

வானத்திற்கு அப்பால் உள்ளவைகளையும்

வகைப்படுத்தி வரிசைப்படுத்தி பாடும் வல்லவர்”

என்கிறார் அதிரை புதுமைக்கவி அல்ஹாஜ் எம்.எம்.அப்துர் ரஜாக் (ஹாதுலி). ‘பூ மலர்களால் கோர்ப்பதை விட பாமலர்களால் கோர்த்துச் சூடினால் அது மாலையானதும் வாடாமல் எந்த வேளையிலும் கருத்து மணம் பரப்பும். அதனால் மலர்மாலை சூடாமல் மணிமாலை சூடியிருக்கிறார் மரபுக்கவிஞர் தாஹா மதனீ” என்கிறார் கலீபா (Mohammed Taha, 1995). ஆலிம் புலவர் ஞ.ஹீனைஸன் முகம்மது ஹக்கிய்யுல் காதிரிய மன்பயீ அவர்கள்,

“வண்ணத் தமிழில் எண்ணக் குவியல்

உள்ளம் சுவைக்கும் தெள்ளுத் தமிழ்த்தேன்

நறுமணம் கமழும் பொருளுரைச் சிந்தனை

ஞாலம் ஏற்கும் காலக் கருக்கள்

நவின்ற நன்நூல் தாஹா தருநூல்”

என்கிறார் பரக்க தாபாத் அன்வர் அலி (Mohammed Taha, 2000). இவ்வாறாக எண்ணிக்கையில் அடங்கா சொல்மாலை, புகழ்மாலை சூடியிருப்பவர் அதிரை தாஹா. இசுலாம் இலக்கிய நூல்களை இயற்றியிருப்பதால் இவர் சிறப்புப் பெறவில்லை. தொல்காப்பியரின் மரப்புபடி, சங்க இலக்கிய முறைப்படி இயற்கை பற்றிய வருணனைகளும் இடம் பெற்றிருப்பதால் இன்றும் புகழ்பெற்று விளங்குகிறார். இதுவரையில் 49 கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

## முகம்மது தாஹா கூறும் இயற்கையின் பொருண்மைகள்

இயற்கை என்பது மனிதனால் உருவாக்க இயலாத ஒன்று. மனிதனே இயற்கையின் ஒரு பகுதியேயாகும். உலகமானது பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐந்தின் அடிப்படையில் இயங்குகின்றன. இந்த அடிப்படை ஐந்தே உலகில் பிற அனைத்திற்கும் காரண காரியமாக விளங்குகின்றன. பூமி தோன்றி பல ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்திருக்கலாம். இதில் பல்வேறு உயிரினங்கள், தாவரங்கள் தோன்றி அழிந்தும் இருக்கலாம். இருப்பினும் இயற்கையில் அழகு என்பதும் புதைந்தேயுள்ளது. இயற்கையின் அழகானது தற்போது புகைப்படக் கலைஞர்களாலும், ஓவியர்களாலும், கவிஞர்களாலும் மட்டுமே போற்றப்படுகிறது. பல்வேறு வகை இலக்கியங்களால் இயற்கையின் வலிமை சித்தரிக்கப்படுகிறது.

இயற்கையும், காட்டு உயிர்களும் உலக வரலாற்றின் பல்வேறு காலங்களிலும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. அந்த வரிசையில் முகமது தாஹாவின் படைப்புகளிலும் இயற்கை முக்கிய இடத்தை வகிக்கிறது.

சூரியன், கடல், மழை, நீர்நிலை, மலை, பனி, அருவி, நிலவு, தேன், மரம், மணம், பறவை, வண்டு, மலர், எழில், விலங்கு, மண், மேகம், விண்மீன், மின்னல் என இயற்கைப் பற்றிய வருணனைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

## சூரியன்

வானத்தில் இருக்கும் மிக பெரிய விண்மீன் சூரியன். நெருப்பின் அடையாளமாகவும் சுடர் என்றும் உயர்ந்தோருக்கும், அரசர்களுக்கும் சிறப்பு வாய்ந்தவர்களுக்கும் மட்டுமே ஒப்பிட்டு கூறக் கூடியது. மனிதர்களால் கண்களால் காணக்கூடிய கோள். உலகத்தின் இயகத்திற்கு முக்கியமான ஒன்றாகும். பகலவன், அனலி, வெய்யோன், ஆதவன், பரிதி, இரவி என பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகின்றன.

"வெய்யோன் ஒளிதன் மேனியில்

விரி சோதியின் மறைய"

என கம்பரும் கையாண்ட இயற்கை சூரியன்,

'அண்டமெங்கும் சுடரைப் பொழிந்தே

அதிசயம் ஆனவராம்" (Mohammed Taha, 1995)

என்று அண்டமெங்கும் சுடரைப் பொழியக்கூடிய ஒரே பொருள் சூரியன். சூரியனுக்கு ஒப்பாய் பிறந்தவர் நபிகள் என சூரியனை ஒப்பிட்டு கூறுகிறார் தாஹா (Mohammed Taha, 1995).

"ஒளியே உமிழும் ஒப்பில் நபியே"

என ஒளியை மட்டுமே வெளியிடக்கூடிய சூரியனை ஒப்பில்லாத நபிகளுக்கு ஒப்பிடும் வருணனை (Mohammed Taha, 1995). மற்றும்,

"நிலைத்த சுடராம்…

புலன்கள் ஐந்தும் பூமானொளியால்

பூத்துக் களிக்கிறதாம்"

என்று சூரியன் ஒளியானது ஒரு போதும் மங்கி போவது இல்லை. பூமியில் சூழலுக்கு ஏற்பவே சூரியனின் உதிப்பும் மறைவுமானது இருக்கும். அதனைக் கருத்தில் கொண்டே நிலைத்த சுடர் என்கிறார் கவிஞர் (Mohammed Taha, 1995).

"கதிரோ முளைப்பது கிழக்கே

எதிரே மேற்கை யடைந்திடுமாம்

கதிராம் மதினா மன்னர் நபிகள்

மேற்கைப் பிடித்தாரே"

சூரியனானது கிழக்கில் உதிக்கும் மேற்கில் மறையும் (Mohammed Taha, 1995).

"குணக்குத் தோன்றும் வெள்ளியின்" (Ramaiya, 2006)

என கிழக்கில் தோன்றும் சூரியனை சங்க இலக்கிங்களும் பாடுகின்றன. இதனையே கவிஞரும் கையாண்டுள்ளார்.

"ஒளிரும் பெருஞ்சுடர் அண்ணல் முஹம்மதே" (Mohammed Taha, 2000)

மாபெரும் ஒளியினை உடைய சூரியனை ஒளிரும் பெருஞ்சுடர் என்றும் அதற்கு ஒப்பீடாய் நபிகளையும் கவிஞர் வர்ணித்துள்ளார் (Mohammed Taha, 2000).

"செங்கதிர் உலவிடும் போழ்தினில் - இருளாம்

செருக்கை யொடுக்குமீன் சுடருண்டோ?"

சூரியனை ஞாயிறு, செஞ்சுடர், செங்கதிர், செஞ்ஞாயிறு என கூறும் மரபு இலக்கியங்களில் சூரியனின் சிறப்பும் உண்டு (Mohammed Taha, 2000).

"செஞ்ஞாயிற்றுச் செலவும்"

என புறப்பாடல் கூறுகிறது (Ramaiya, 2006). மேலும் இருளை விரட்டக்கூடிய சுடர் சூரியனை விட வேறேதும் இல்லை.

"இருளைக் கிழிக்கும் பேரொளிச் சுடராம்" (Mohammed Taha, 2001)

இருளை அகற்றக்கூடிய பேரொளியானது சூரியன் அதனை,

"பாய் இருள் நீங்க பல்கதிர் பரப்ப ஞாயிறு"

என பதிற்றுப்பத்து கூறுகிறது (Ramaiya, 2006). இதனை கவிஞர் இருளை கழிக்கும் பேரொளி என்று வர்ணிக்கிறார்.

"விண்ணில் செங்கதிர் பேரொளியே" (Mohammed Taha, 1994)

என்றும்,

"விரியும் சுடரே" (Mohammed Taha, 1992)

எனவும் சூரியனின் இயல்பை சில இடங்களில் வருணனையாக, ஒப்பீடாக சில இடங்களிலும் கவிதையில் பாடியுள்ளார்.

## தாஹா கூறும் நிலவு

நிலவு, பூமியைச் சுற்றிவரும் சிறிய துணைக்கோள். பூமியை சுற்றி வருவது அனைவரும் விரும்பக்கூடிய ஒப்பிடக்கூடிய, வருணனை செய்யக்கூடிய இயற்கையின் மிக அழகிய படைப்பு. குளிர்ச்சி நிறைந்ததுƒ ஒளிபெற்று இரவில் ஒளிதரக்கூடியது.

"இரவுச் செய்யும் வெண்திங்களும்

மை தீர்ந்து கிளர்ந்து விளங்க

தலைவன், தலைவி ஒருவரையொருவர் பிரிந்து வாழும் நிலையில் அவர்களுக்கு துன்பம் நல்குமாறு சங்க இலக்கியங்கள் பாடுகின்றன (Ramaiya, 2006).

"மணிநிற மைஇருள் அகல, நிலா விரிபு

கோடு கூடு மதியம் இயலுற்றாங்கு"

கொடைத் தன்மைக்கு சந்திரனானது ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது (Ramaiya, 2006).

"சிறப்பில் பூரண மதியாய் உலவிப் புகழால்

நிறைந்த நபி"

முழுநிலவானது அனைவராலும் விரும்பக்கூடியது. அதனையே நபிகளுடன் ஒப்பிட்டுள்ளார்.

"நிலவும் ஒளியாம், நிம்மதி தருநிழலாம்"

நிலவின் ஒளியானது குளிர்ச்சி பொருந்தியது (Mohammed Taha, 1995). மனதிற்கு ஆறுதல் வழங்கக்கூடியது என்பதை தனது வரிகளில் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

“வளரும் மதியை, வண்ணச் சுடரை” (மு முகமது தாஹா, 1995)சந்திரனின் இயல்பானது வளர்ந்து முழு மதியை அடைந்து பின்னர் தேய்ந்து அமாவாசையாக இல்லாமல் போகும். அவ்வாறு வளரும் தன்மையை தனது கவிதைகளில் கூறியுள்ளார்.

“சந்திர நபியே சல்லல்லாஹீ அலைஹிவ சல்லமே

என நபியை சந்திரன் என்றும்,

“வானான என்னுடை நெஞ்சிலே - மறுவில்

வளர் மழு மதியாகி ஒளிர்கவே”

வானில் முழுநிலா எவ்வாறு ஒளிதருமோ அதைப் போலவே எனது மனதில் ஒளிதரக்கூடியவர் நபிகள் என நிலவை மட்டுமின்றி நிலவின் இருப்பிடமான வானையும் வர்ணித்துள்ளார் (Mohammed Taha, 1995). மேலும்,

“பூரண சந்திரனை”

“முழுமதி முகிய்யிததீனே”

“தண்மதி குளிராம்!”

என்றும்

“பாய்ச்சிப் பாலை படரொளி மதியாய்ப்

பார்க்க வருந்திரு உதுமானே”

இருளில் சூரியனின் மறைவிற்குப் பின் வானம் முழுவதும் தனது ஒளியினை படரவிடுவது நிலவின் ஒளியே அதனையே படரொளி மதியாய் என்கிறார் கவிஞர்.

“நிலவு உமிழும் கதிர்களோ

நிலைத்த முகத்தின் பேரெழில்”

நிலவிலிருந்து வரும் குளிந்த ஒளியானது ஒளி பொருந்திய முகத்திற்கு கவிஞர் வர்ணித்துள்ளார். இவ்வாறாக நிலவினைப் பற்றிய வருணனைகள் இடம் பெறுவதோடு பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியங்களில் அம்புலிப் பருவம் முழுவதிலும் நிலவானது சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

“காற்றில் மிதக்கும் வெண்ணிலவே

காண்பாய் பிள்ளை கலந்தாடு”

அம்புலிப் பருவம் என்பது குழந்தையின் பதினைந்தாம் மாதத்தில் நிகழ்வது. நிலவை நோக்கி கை நீட்டி தன் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைப்பதே பிள்ளைத்தமிழ்.

“தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்ப்

பொன்முகக் கிண்கிணியார்ப்பப் புழுதி யளைகின்றான்

என் மகன் கோவிந்தன் கூத்தினை இளமா மதி

நின் முகம் கண்ணுள் வாகில் நீ இங்கே நோக்கிப்போ”

என பெரியாழ்வார் கண்ணனுக்காக நிலவினை அழைப்பது போலவே வானில் இருக்கும் நிலவினை காற்றில் மிதக்கும் நிலவே எனவும், முஹித்தீன் குழந்தையுடன் கலந்து விளையாட வருமாறு கவிஞர் அழைக்கிறார்.

“பாதி ஒளியால் நீ சிறந்தாய்

படைத்தான் ஒளியால் சிறந்தாரே

எரியும் பரிதி முன் நின்றும்

இனிமை யூட்டிச் சிரிக்கின்றாய்”

சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றே ஒளியை சந்திரன் வழங்கும் போதும் அதன் குளிர்ச்சி இயற்கையாகவே அனைவரையும் மகிழ்விக்கக் கூடியது. மேலும் தமிழ் இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் இடம் பெறுவதைப் போலவே நிலவினையும் இயற்கை வருணனையோடு கையாண்டுள்ளார்.

## கடல்

கடல் மிகப்பெரிய நீர்நிலை. நம் அண்டம் உலகம் முழுவதும் உவர் நீராகிய கடலால் சூழப்பட்டுள்ளது. இயற்கையின் மாபெரும் படைப்பு கடல். கடலை மையமாகக் கொண்டு „நெய்தல் … எனும் திணை முழுவதும் இயங்கி வந்துள்ளது. இலக்கியங்களில் இன்றியமையாத இடம் பெற்றது கடல். தன்னுடைய பரப்பிற்கும், ஆழத்திற்கும், அலைக்கும், ஓசைக்கும், பல்லுயிர்களை தன்னகத்தே கொண்டிருப்பதற்கும்,

“பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக் கத்துக்

குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”

கடல்கோள் எனப்படும் கடல் மாபெரும் அலைகளோடு பொங்கி வந்து நாட்டை அழிப்பதும் கூட மன்னது கோபத்திற்கு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலப் பாடல்களில் முழுவதும் தனது சிறப்பினைப் பாடுவது கடல்.

ஆடும் கடலில் நடுவில் மீன்கள் ஆனந்தம் கொள்ளும்

ஆடுங்கடலின் கரைக்கோ வந்தால் அதிதுயரால் துள்ளும்

எண்ணற்ற வளங்களைக் கொண்டது கடல். பல்வேறு உயிரினங்களைத் தன்னிடத்தில் கொண்டது கடல். அதிலே வாழும் உயிரினங்களுக்கு அடைக்கலமாய் இருக்கும் கடலை விட்டு அவ்வுயிர்கள் நீங்கினால் உண்டாகும் துன்பத்தையே இதில் கவிஞர் வர்ணித்துள்ளார். இன்பமும் துன்பமும் எல்லா இடத்திலும் நிறைந்துள்ளது என்பதற்கும்,

“அன்பின் கடலே பண்பின் முத்தே

“கத்துங்கடலின் முத்தே”

கடலில் பல்வேறு வளங்கள் இருப்பினும் கடலில் கிடைக்கும் முத்துக்கள் நவரத்தினங்களில் ஒன்று. அது மேலும் சிறப்புடையது. அதனை உயர்ந்தவர்களுக்கே ஒப்பிடப்படுகிறது.

“நெடுங்கடல் துதிப்பதனால் அரியமுத்து விளைந்து”

இயற்கையாக விளையக்கூடிய முத்துக்கள் மட்டுமே சிறப்பு வாய்ந்தது. அது கடலில் விளைவதால் மேலும் சிறப்பு இதனையே கவதைகளின் கவிஞர் வர்ணித்துள்ளார்.

“ஆடி வருங்கடலே - முத்துக்கள்

அள்ளி வருங்கடலே”

எப்போதும் ஓயாத அலைகளைக் கொண்டது என்பதையே ஆடி வருங்கடலே என வர்ணிக்கிறார்.

“இணங்கும் ஞாடக் கடல் தன்னில்

இன்னமு தெடுத்த எழிலரசே”

என முத்துக்களால் சிறப்பு பெற்ற கடலையும்,

"நந்தும் பெருங்கடலே"

"துள்ளிக் குதித்திடும் தூய்கடல்"

"திகழ்கடல் ஞானம்"

"அள்ளி நீரை அலையாய் ஆடும்
ஆழிய கடலோ முத்துக்கும்
அழகு பவளத் திட்டுக் கெல்லாம்
அரிய கோட்டை.... ... ... ... ... "

முத்துக்களை மட்டுமின்றி பவளங்களையும் விளைவிக்கக் கூடிய கடலின் சிறப்பையும்,

"அலைகடல் உள்ளே அற்புதமே
அதிகப் பொருளே பெருஞ்செல்வம்
அழகுப் பவளம மணிமுத்தும்
ஆயிரம் ஆயிரம் வகைமீனும்
நிலைக்கும் நின்றோர் கடலாகி
நிறைந்த கருத்தும் ஞானமணி"

இவ்வாறாக கடலும், கடலில் உள்ள வளங்களும் முகமது தாஹா அவர்களால் வர்ணிக்கப்பட்டுள்ளது.

## மலை

ஐந்திணைகளில் முதலானதாகக் கூறப்படுவது மலையும் மலை சார்;ந்த இடமுமாகிய குறிஞ்சி.

"அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்நெடுங் குன்றம் பாடிய பாட்டே"

என குறுந்தொகை கூறுகிறது (Ramaiya, 2006).

"அழிய லாயினடி அன்பு பெரிதுடையன்
பழியும் அஞ்சும் பயமலை நாடன்"

இவ்வாறு சங்க இலக்கியங்களில் பாடப்பட்டுள்ள இயற்கை அரண் மலையாகும். அனைத்து வளங்களும் கொண்டது மலை (Ramaiya, 2006).

"கோடு படுத்த பனியைப் போல குளிர்ச்சி தருபவராம்"

கோடு என்பது மலை. கடல் பல்வேறு வளங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது போல் மலைகளும் தன்னகத்தே பல்வேறு உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் விளங்குவதுƒ குளிர்ச்சி நிறைந்தது.

"அடர்காடும் குன்றும்சூழ் அரபகத்தின் அணிவிளக்கே"

அடர்ந்த காடு, மலை போன்றவை இயற்கையாகவே உருவானது என்றும்,

"உருவில் பெருத்த மலைப்பக்கம்

ஊடும் நிழலும் தானுண்டே"

உருவில் பெரிய பிரம்மாண்டத்தைக் கொண்டது என்பதையும்,

"மலையாம் அரணே தீனுக்கு

மாநதி ஞானம் மண்ணோர்க்குக்"

மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தனது நாட்டின் அரணாக விளங்குவது மலைகளே. தற்போதும் கூட மலைகளே நாட்டின் எல்லைகளாக விளங்குகின்றன என்பதையும்,

"மலையும் பொறுக்க முடியாத

மண்டும் துன்பம் தாக்கிடவே"

மலைகள் மிக உறுதியானவை. எதையும் தாங்கிக் கொள்ளும் தன்மையும் கடினமும் கொண்டவை அதனையே கவிஞர் வர்ணித்துள்ளார்.

"மலையாய் நின்றே பெருந் துணிவு

மலர்த்தி மார்க்கம் உரைத்தவரே"

என மலையின் சிறப்புகளுக்கும், உயர்வுக்கும், உறுதிக்கும் ஒப்பீட்டு வர்ணிக்கப்பட்டுள்ளது.

## தேன்

தேன் இனிமையானது. பூக்களிலிருந்து வண்டுகளால் சேகரிக்கப்படுவது. குறிஞ்சித் திணையில் வாழும் மக்களின் தொழிலாகவே தேனெடுத்தல் உள்ளது. இனிமையானவர்களுக்கும், இனிமையான செயல்களுக்கு மட்டுமே ஒப்பீடு செய்யக்கூடிய உவமைப்பொருள்.

"சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

குறிஞ்சி மலர்களில் உள்ள தேனை சேகரிக்கும் வண்டுகளை உடைய நாட்டை உடையவன் தலைவன் என தேனையும் தேன் கிடைக்கும் மலை நாட்டையும் குறுந்தொகை பாடுகிறது.

"காடுபடுத்த கசிதேன் போல கருத்துப் பொழிபவராம்"

தேனின் இனிமை, இனிமையானவர்களுக்கு ஒப்பிடப்படுகிறது.

"தீமை மறைந்தே வாய்மை நிறைந்தே தேனாய் இனிக்கிறதே"

தேன் இனிமையானது மட்டுமல்ல. நோயை போக்கும் மருந்தாகப் பயன்படக்கூடியது. தீமை தரக்கூடிய நோயைப் போக்கி ஆரோக்கியத்தைத்தரக் கூடிய மருந்தாக உதவுவது போல் வாய்மையானது தீமையை அழித்து நன்மையளிக்கக் கூடியது என்பதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

"புனித கலிமாப் பூவில் திருமறைத் தேனைப் பொழிபவராம்" (மு முகமது தாஹா, 1995)

பூவில் தேன் இருப்பதைப் போலவே புனிதமான இசுலாமியக் கடமைகளும் ஒன்றாகிய கலிமாவில் நிறைந்துள்ள கருத்துக்கள் தேனைப் போல் நிறைந்துள்ளது என்கிறார் கவிஞர்.

"தேனடை யாகுமென் நெஞ்சிலே - நபியே

தேனெனத் தேங்கியே நிற்பீரே!"

தேனீக்கள் பல்வேறு மலர்களில் சென்று மலர்களை சேகரித்தாலும் அதனைக் கொண்டு வந்து தேனடையிலே சேகரிக்கும் தேனின் இருப்பிடமே தேனடை.

“தேனின் சுவையே, தெள்ளமுதே,

தெம்பே அளிக்கும் சொல்லமுதே!”

தேனின் சுவைக்கும், இனிமைக்கும் வேறெந்த பொருளையும் ஒப்பிடவே இயலாது. அப்படிப்பட்ட இனிமையுடைய சொற்களே அனைவருக்கும் இன்பம் தரக்கூடியது என இனிமைக்கு உவமையாகவும்,

தேனீ தேனைத் தேடிவரும்

திகழும் கூட்டில் நிறைந்திடுமே

ஈனப் பிணிக்கு மருந்தாகி

இன்பம் தருமே”

“தேனும்மருந்தாகும்”

எனத் தேன் மருந்துப் பொருளாகவும் தேன் பயன்படும் என அதிரை தாஹா பதிவு செய்துள்ளார்.

## மழை

மழை இயற்கையின் மிக அற்புதப் படைப்பு.

“வான் முகந்த நீர் மலைபொழியவும்

மலைப்பொழிந்த நீர் கடற்பரப்பும்

மாரி செய்யும் பருவம் போல

நீரினின்று நிலத்தோற்றம்” (Ramaiya, 2006)

மேகமானது கடலிலிருந்து நீரை உறிஞ்சி மலைமேல் பொழியவும், மலையில் விழுந்த மழை நீரை ஆறுகள் மூலம் கடலில் சேர்க்கவும், மழை பெய்யும் பருவம் போல மழையானது நீரை நிலத்திலிருந்து மீண்டும் நன்னீராக நிலத்திற்கே கொண்டு வருவது மழை.

“கருவி வானம் கதழ் உறை சிதறி

கார் செய்தன்றே கவான் பெறுகானம்”

இவ்வுலக உயிர்கள் யாவும் வாழ்வதற்குக் காரணமானது மழை (Ramaiya, 2006). மழை என்பது எல்லாக் காலங்களிலும் கொடைக்கு உவமையாகவே கூறப்பட்டுள்ளது. மழைக்கானக் காரணத்தை அறிவியல் ரீதியாகவும் மக்கள் கண்டறிந்திருந்தனர்.

“மாரியைப் போல தொல்லைகள் சூழ்ந்து வாட்டிய போதினுமே

மனமும் தளரா தாயாய் நின்றே வாகை சூடியவர்”

மழை அனவருக்கும் நலன் பயப்பது, பூமியை குளிரச்செய்து அனைத்து புல் பூண்டுகளையும் வளரச் செய்வது இருப்பினும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு உண்டாக்கும். அதனையே தனது கவிதைகளில் கவிஞர் வடித்துள்ளார்.

“இடி இடி வானம் மின்னல் வெட்ட அருள் மழை இறக்கு நபி”

மழை மேகம் குளிர்ந்து நீரைப் பொழிவது. ஆனால் மழை எப்போதும் தனியாக வருவதில்லை. மேகங்கள் தனக்குள் மோதி இடி, மின்னல் உருவாகின்றன இதனையே சிறப்பித்துள்ளார்.

“தேன் மழையே சுராக்காவே தேடவரும் சுலைம் சுலைமே

வான் மழையே சுலைம், சுலைமே வளர்பத்ரீன் கண்மணியே"

கடல் நீரையே ஆவியாக எடுத்துச் சென்றாலும் மழை நீரானது சுத்தமான தூய நன்னீரையே மழையாகப் பொழிகிறது. அதன் சுவையினாலே தேன் மழை, வான் மழை என்கிறார்.

## அருவி

வானிலிருந்து விழும் மழை நீரானது மலைகளிலிருந்து அருவியாக ஒலி நிறைந்த நீர் நிலையாகத் தோற்றம் பெருகிறது.

"சூருடை நனத்தலைச் சுனைநீர் மல்கப்

பெருவரை அடுக்கத் தருவி யார்ப்பக்"

சுனைநீரில் நிறைந்து பெரிய மலையில் அருவி கொட்டும்படியான கார்காலம் வந்தாக நற்றிணை கூறுகிறது (Ramaiya, 2006).

"நாள் மழை தலை இயல நல்நெடுங்குறைத்து

மால் கடல் திரையின் இழ்தரும் அருவி"

மழை பொழிந்ததால் பெரிய மலையிலிருந்து கடலலை போல அருவி கொட்டுயது (Ramaiya, 2006). அதே போல தற்போது தலைவன் இல்லாத காரணத்தினால் கண்களிலிருந்து அருவி கொட்டுவதாக நற்றிணையில் அருவி பற்றிய வருணனை இடம் பெற்றுள்ளது.

"அருவி ஊற்றை அணிமணி மருந்தை அள்ளித் தருகிறது" (மு முகமது தாஹா, 1995)

அருவியாக கொட்டும் நீர் மலைகளில் பல்வேறு மூலிகைகளை உரசி வருவதாலும் பல மூலிகைத் தாவரங்களை வளரச் செய்வதாலும் அணிமணி மருந்தை அள்ளித் தருவதாக வர்ணிக்கிறார்.

"அருவி பாயும் அருங்குன்றம்"

என அருவியின் அழகினையும்,

"குதித்தெழும் அருவியின் அழகே"

அருவியின் வேகமானது நீர் நடனமாடுவதைப் போன்று காட்சியளிப்பது. அதனால் குதித்து எழும் தன்மையது என்றும்,

"அருவியால் வந்தவரே"

மருத்துவ குணம் கொண்ட உயிர்களைச் செழிக்கச் செய்யும் தன்மையை அருவி கொண்டிருப்பதனால் இங்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக அருவியின் சிறப்பினையும் இயற்கையையும் தன் கவிதைகளில் படைத்துள்ளார் முகமது தாஹா.

## நீர்நிலை

நீர்நிலைகள் என்பன கடல்கள், ஆறுகள், சுனைகள், மடுக்கள், நீரோடைகள், ஏரிகள், குளங்கள், அணைகள் போன்றவற்றை குறிக்கும்.

"நீரின்றி அமையாது உலகெனின்"

பஞ்சபூதங்களில் ஒன்றே நீர். கடலிலிருந்து ஆவியாகும் நீர் மழையாகப் பொழிந்து அருவியாக, ஆறாகப் பயந்து நிலங்களைச் செழிக்கச் செய்து குடிநீராகவும் விவசாயத்திற்கும் பயன்பட்டு நாட்டினை செழிப்பாக்கக் கூடியது.

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா

மலைத்லைய கடற்காவிரி

புனல் பரந்து பொன்கொழிக்கும்”

உயிர்கள் உயிர் வாழ ஆதாரமாக இருப்பது நீர் (Ramaiya, 2006). மழையானது பெய்யாமல் பொய்த்தாலும் காவிரி ஆறானது எப்பொழுதும் நீரினைக் கொண்டு இருப்பதால் மக்கள் வளமுடனே வாழ்வார் என்கிறது பட்டினப்பாலை.

“நிலன் நெளிமருங்கில் நீர்நிலை பெருகத்

தட்டோர் அம்ம இவண் தட்டாரே” (Ramaiya, 2006)

நிலம் எங்கெங்கும் பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் நீர்நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியாப் புகழ் பெற்று விளங்குவர் என்கிறது புறநானூறு.

“அறையும் பொறையும் மணந்த தலைய

எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்

தெண்ணீரச் சிறுகுளம் கீள்வது மாதோ”

என ஏரி எந்த வடிவில் அமைய வேண்டும் என்கிறது புறநானூறு (Ramaiya, 2006).

“ஆழம் இல்லாக் குளத்தில் கலக்கா

அருநீர் குடித்திடலாம்

அதனைக் கலக்கின் சேறும் கலந்தே

அரும் பயன் நீங்கிவிடும்”

குளத்தில் தேங்கியிருக்கும் நீரின் தன்மையையும்,

“தேங்கும் தண்ணீர் தெறிக்கும் வெப்பம் அதிலே குளித்தாலோ

படரும் வெண்மைக் குட்டம் என்நீர் பார்வரு மருத்துவரே”

வெப்பத்திலே பலநாள் தேங்கியிருக்கும் தண்ணீரினை உபயோகித்தால் உண்டாகும் நோயைப் பற்றியும்,

“மலையோ அரணாம் பனிகசிந்தே

மாநதியாகிப் பயனாகும்”

மலைகளில் பனிபடர்ந்துள்ள பகுதிகளில் உள்ள பனியானது உருகி ஆறாக உருவாகும் என்றும்,

“பள்ளம் பாயும் காட்டாறாய்ப்

பாதை மாறுவார் வாழப்”

ஆறாக ஓடிவரும் நீர் பள்ளத்தை நோக்கிப் பாயும் அதுபோல வாழ்க்கைப் பயணத்தில் மனிதர்களின் பயணமும் மாறும் என்கிறார் கவிஞர்.

“ஓடிப் பாயும் நதி மண்ணில்

ஒப்பில்லாத மனதருக்குள்

ஒட்டும் கெட்ட பாவத்தை

ஒப்பிக் கழுவும் நீராம்தின்"

ஓடிப் பாய்ந்து வரும் நதி நீரானது பல்வேறு பொருள்களை அடித்துத் தன்னகத்தே கொண்டு வரும். அதன் தூய்மைகளைப் போலவே மனிதருக்குள்ளும் பல்வேறு தூய்மைகள், பாவங்கள் நிறைந்திருக்கும் அதை அனைத்தும் நீக்குபவர் முஹிய்யித்தின் என கவிஞர் முஹய்யித்தீனுக்கு நதியை ஒப்பிட்டு வர்ணித்துள்ளார்.

“நன்னீர் பாய்ச்சும் நல்லாறு

நற்கரை சேர்க்கும் முஹய்யித்தின்”

மழையிலிருந்தும் சுனையிலிருந்தும் உருவாகும் நீர் அருவியாகி, ஆறாகி ஓடும். அது பெரும்பாலும் நன்னீரைக் கொண்டு திகழும். இந்த நன்னீர் மக்களுக்கு உதவுவது போலவே மக்களுக்காகவே வாழக் கூடியவர் முஹய்யித்தீன் என்கிறார் கவிஞர்.

“வற்றாத ஊற்றே”

இவ்வாறாக முகமது தாஹா அவர்கள் குளம், குட்டம், நதி, காட்டாறு, ஆறு, ஊற்று ஆகிய நீர்நிலைகளின் வருணனைகளை தமது படைப்புகளில் கூறியுள்ளார்.

## மான்

விலங்கு இனங்களின் மான்களுக்கு தனி இடமுண்டு. மான்களை வர்ணிக்காத கவிஞர்களை இலக்கியத்தில் காண இயலாது. மான்களில் பல்வேறு வகைகள் உள்ளன. கலை, மரை, உழை, வருடை, நவ்வி, இரலை, கடமா, ஏணம், ஏணி, பினை என பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகின்றன.

“இரும்பு திரித்தன்ன மா இரு மருப்பின்

பரல் அவல் அடைய இரலை தெறிப்ப”

“இன்நிழல் இன்மையான் வருந்திய மடப்பானை

தன்நிழலை கொடுத்து அளிக்கும் கலை”

இவ்வாறாக சங்க இலக்கியங்களில் மான்கள் பற்றிய வருணனைகள் இடம் பெறுகின்றன (Ramaiya, 2006). இசுலாமிய இலக்கியங்களிலும்,

“மானை நோக்கிப் பிணையாய் நின்று மாண்பின் பேறு நபி”

“மானாய் மருளும் பாத்திமாவே”

“மானாய் மருணடு தந்திரத்தால்”

என மானின் மருளும் தன்மையையும்,

“ஒரே மாதிரிப் புல்

இருவகை மான்கள்

அதை மேய்கின்றன

ஒரு நீர்த்துறையில்

இரண்டும் குடிக்கின்றன

ஒரு மான் தந்தது

கஸ்தூரி

மற்றொன்று ஈன்றது

சாணம்”

ஒவ்வொரு செயலிலும் நன்மை தீமை என இரண்டு அமைந்திருப்பதைக் கூறுவதற்காகக் கவிஞர் மான்களின் இயல்புகளை வர்ணித்துள்ளார்.

## முடிவுரை

இலக்கியங்களில் இயற்கையை இணைத்துப்பாடும் மரபே இன்றுவரை பின்பற்றப்பட்டுவருகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் முதற்பொருளும் கருப்பொருளும் இயற்கையையும் சூழலையும் குறிப்பதாகும். மனிதனைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகள் அனைத்தும் சுற்றுச்சூழல். இந்தச் சுற்றுச்சுழல் என்பது ஐம்பூதங்களும், பல்லூயிர்களும் என அனைத்தையும் உள்ளடக்கியதேயாகும். இயற்கையாக அமைந்த நிலப்பகுப்பை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணையாகப் பகுத்து வாழ்ந்தனர். அதனடிப்படையில் இயற்கை என்பது கண்ணால் கண்டு மனதினால் அனுபவித்து உணரக்கூடியது. அப்படிப்பட்ட இயற்கையானது இலக்கியங்களில் படைக்கப்படும் போது படைப்பாளர்களின் எழுத்துக்களினால் அலங்கரிக்கப்பட்டு படிப்போர்களின் கற்பனை மூலமாக படைப்பாளரின் இயற்கைக்கு உயிரூட்டப்படுகின்றது. மனிதனால் உருவாக்க இயலாத உன்னத படைப்பு இயற்கை. அதனை கவிபாட மட்டும் இயலும். அத்தகைய இயற்கை வளத்தினையே அதிரை முகம்மது தாஹா அவர்கள் சிறப்பாக கையாண்டுள்ளார். அதன் வருணனைகள் ஒவ்வொன்றும் இசுலாம் சமூகத்தில் தோன்றிய அறிஞர்களை ஒப்பிட்டு உவமைப்படுத்தி வருணனை செய்யப்பட்டுள்ளது. என இயற்கையின் வாயிலாகத் தனது கவித்தன்மையை தாஹா அவர்கள் தமது படைப்புகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகிறது.

## References

Arunachalam, M. (2018) Tamil ilakiya Varalaru, Arun Pathipagam, Trichy, India

Kamal Batcha (2006) Islamiya Ilakiyamum Panpadum, Pirai Nila Pathipagam, Thanjavur, India

Mohammed Taha (1992) Valimarkal Valthu Muthal Bagam, Kairiyat Patippakam, Adirampattinam, India

Mohammed Taha (1994) Gauthu Muhyiddin Pillaithamil, Singai Pathippagam, Chennai, India

Mohammed Taha (1995) Callallahu Alaihi Vacallam, Kairiyat Patippakam, Adirampattinam, India

Mohammed Taha (2000) Enthel Nabiyum Irainesarkalum, Makin Printers, Chennai, India

Mohammed Taha (2000) Nabi Pugal Malai Irandambagam, Pusra Agencies, Chennai, India

Mohammed Taha (2001) Islamiya Aivu Thirattu, Mahin Printers, Chennai, India

Ramaiya, N. (2006) Sanga Ilakiyangal Molamum Uraiyum, Varthaman Pathipagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License